குறுக்கு வழியாக வெட்டினால் ஏறத்தாழ ரூ. 37 கோடி ஆகும். இராமேஸ்வரம் வழி வெட்டுவதில் செலவு குறைச்சலாக இருக்கும் என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இப்போது எல்லாத் தொகையையும் மத்திய அரசே போட வேண்டும் என்றுதான் கேட்டிருக்கிறோம். அவர்கள் அல்லவா சொல்ல வேண்டும். மாநில அரசும் கொஞ்சம் கொடுங்கள் என்று சொல்ல வேண்டுமென்றால் அவர்கள் அல்லவா சொல்ல வேண்டும்? ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்த பிறகு அதில் இன்னிது, யார் யாரால் போடப்படும், எந்த வங்கியிலிருந்து பெற வேண்டும் என்றெல்லாம் முடிவு செய்யப் படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இது பாதுகாப்பிற்கு இன்றியமையாத ஒரு திட்டம் என்ற காரணத்தால் அந்த அடிப்படையில் இதற்கு முதன்மையிடம் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன ஒரு முக்கியத்தன்மையை அரசு உணர்ந்திருக்கிறது. பாதுகாப்பிற்கு இது மிகுந்த அவசியம்.

Visit of Italian Agricultural Experts

* 504 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :—

(*a*) whether the Italian Government's Agricultural experts have visited this State during January 1972 ;

(*b*) the details of the places they visited ; and

(*c*) the purpose of their visit ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) & (உ) : இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: நம் மாநிலத்திலுள்ள வேளாண்மை வல்லுநர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி அவர்கள் அனுபவத்தை நம் விவசாயத் துறையில் புகுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஏற்கனவே அனுப்பப்பட்டு அவர்கள் பயிற்சி பெற்றதற்குப் பின் அது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. கே. ஏ. வகாப் : வேளாண்மைத் துறையில் ஜப்பான் நல்ல முறையில் முன்னேறியிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே ஜப்பானிலிருந்து வேளாண்மைத்துறை நிபுணர்களை வரவழைத்து நம் வேளாண்மைத்துறையில் முன்னேற்றங்களைச் செய்வதற்கு அரசு முனையுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அந்த நாட்டுப் பொருளாதாரம், அந்த நாட்டில் இருக்கிற வசதி வாய்ப்புகள் இவற்றினை தமிழ்

நாட்டோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அவை சரியாக வருமா என்பது வேறு பிரச்னை. ஆனால் அங்கு கண்டுபிடிக்கப்படுகிற பல ஆராய்ச்சிகள் தமிழ்நாட்டிலும் இங்கு இருப்பவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு பயன் படுத்தப்பட்டு வருகிறது.

திரு. கோவை செழியன் : வேளாண்மைத்துறையில் விஞ்ஞான மேல் படிப்பிற்கு மேல்நாடுகளுக்கு அனுப்பப்பட்டு பின்பு அவர்கள் திரும்பி வருகிறபோது அரசாங்கமோ, பல்கலைக் கழகமோ சில நேரங்களில் அவர்களுக்கு தகுதியான வேலை தரமுடியாமல் போய்விட்டது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அது வேளாண்மைத் துறை யில் மாத்திரமல்ல. பல்வேறு துறைகளில்கூட அப்படி அனுப்பப்பட்டவர் களுடைய பயிற்சி இங்கு பயன்படாத காரணத்தால் இப்போது அனுப்பப் படுகிற நேரத்தில் பரிசீலனை செய்து அனுப்பப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether any ryots have been deputed to other nations, so as to study the conditions of agriculture there ?

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம்: அப்படி இல்லை.

திரு. கு.அ. பொம்மன் : மைசூர் மாநிலத்தில் ஜப்பான் நிபுணர்கள் வந்து வேளாண்மைத் துறையில் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதில் நல்ல வருவாயும் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, நம் மாநிலத்திலும் இதுபோல் ஜப்பானிய முறைகளை மேற்கொண்டு நமது வேளாண்மைத் துறையை முன்னுக்குக் கொண்டுவர அவர்களின் உதவியைப் பெறுவார்களா ?

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம் : தற்சமயம் பல்வேறு பகுதி களில் இருந்தும் தமிழ்நாட்டிற்கு வந்து இங்குள்ளவற்றைப் பார்வையிட்டு தமிழ் நாட்டில் வேளாண்மைத்துறையில் எடுக்கப்பட்டுள்ள முயற்சிகளை எல்லாம் பாராட்டி இதை தங்களுடைய பகுதிகளுக்கும் செயல்படுத்த வேண்டுமென்று சொல்லிவிட்டு சென்றிருப்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளியில் கலவை உரக்கிடங்கு

* 505 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி நகரசபையில் இயந்திரச் சாதன அமைப்புள்ள கம்போஸ்ட் உர டெப்போ ஒன்றை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?